# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

முன்னிலை: திரு. கி. ஆனந்த்., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி
2025 ம் வருடம் நவம்பர் திங்கள் 26 ம் நாள் புதன்கிழமை
சி.சி. எண். 615/2023
CNR No . TNTT07-014409-2023

காவல் உதவி ஆய்வாளர்

கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையம்.

குற்ற எண்.8/2023

இதச பிரிவு – 498-A ..... புகார்தாரர்

/எதிர்/

செண்பகவள்ளி க.பெ. மகாராஜா ..... நிகழ்நிலை புகார்தாரர்

இம்மனுவானது 26.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சரவணன் அவர்கள் ஆஜராகியும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மற்றும் ஆவணங்கள் ஆகியவை பரிசீலனை செய்து இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

1. எதிரிகள், நிகழ்நிலை புகார்தாரரை கொடுமை செய்ததாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. நிகழ்நிலை புகார்தாரர் கூடுதல் விசாரணை செய்ய வேண்டி சி.ஆர்.எம்.பி.எண்.14950/2023 ல் மனுதாக்கல் செய்து, அது அனுமதிக்கப்பட்டு, விசாரணை அதிகாரி கூடுதல் விசாரணை செய்ததில், எதிரிகள், நிகழ்நிலை புகார்தாரரை கொடுமை செய்தது தெரிய வந்தாகவும், எதிரிகள் வரதட்சணை கேட்டு கொடுமை செய்யவில்லை என்றும், நிகழ்நிலை புகார்தாரர், எதிரிகள் மீது மிகைப்படுத்தி புகார் அளித்துள்ளதாக விசாரணை அதிகாரி கூடுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

K ANAND Digitally signed by K ANAND Date: 2025.11.26 19:33:54 -0600

3. நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**ஆட்சேபனையின் சுருக்கம்**

4. மாவட்ட சமூக நல அலுவலர் எதிரிகள் விசாணைக்கு ஒத்துழைக்காத விபரத்தை தெளிவாக குறிப்பிட்டும், விசாரணை அதிகாரி மீண்டும் அதே சங்கதிகளைக் குறிப்பிட்டு எந்த மாற்றமுமின்றி கூடுதல் விசாரணை அறிக்கை சமர்ப்பித்துள்ளார். எதிரிகள் வரதட்சணை வாங்கியதாக சாட்சிகள் கூறியிருந்தும், வரதட்சணை தடுப்பு சட்ட பிரிவு நீக்கியுள்ளது. எதிரிகள் நிகழ்நிலை புகார்தாரரை மிரட்டி, அசிங்கமாகத் திட்டிய பிறகும், இதச பிரிவு 506(2) மற்றும் 294(பி) நீக்கி இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, கூடுதல் இறுதியறிக்கையை நிராகரிக்க வேண்டும்என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. **இந்த மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்**

6. வழக்கு ஆவணங்கள் பார்வையிடப்பட்டு கவனமாக பரிசீலிக்கப்பட்டது. நிகழ்நிலை புகார்தாரர் தரப்பு கேட்கப்பட்டது.

7. நிகழ்நிலை புகார்தாரர் தனது ஆட்சேபனை மனுவில், எதிரிகள் வரதட்சணை வாங்கி அசிங்கமாகத் திட்டி, கொலை மிரட்டல்விடுத்ததால், அதுசம்பந்தப்பட்ட சட்ட பிரிவுகளை சேர்க்க வேண்டும் என்று ஆட்சேபனை தெரிவித்துள்ளார். ஆனால், புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்த கூடுதல் இறுதி அறிக்கையில் மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு முகாந்திரம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட சமூகநல அலுவலர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் நிகழ்நிலை புகார்தாரர் நகை வாங்கியதற்கான ரசீது தாக்கல் செய்துள்ளதாகவும், எதிரிகள் குடும்ப வன்முறை செய்ததாகவும், நிகழ்நிலை புகார்தாரரின் நகைகள் எதிரிகளிடம் இருப்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2025.11.26 19:34:00 -0600

8. பொதுவாக திருமணத்தின் போது சீதனமாக நகை கொடுப்பதை வரதட்சணையாக கருத முடியாது. மேலும், சமூக நல அலுவலர் தாக்கல் செய்த அறிக்கையில் நிகழ்நிலை புகார்தாரரின் நகைகள் எதிரிகளிடம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், புலன்விசாரணை அதிகாரி சாட்சிகளை விசாரித்ததன் அடிப்படையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்த போதும், கூடுதல் இறுதி அறிக்கை தாக்கல் செய்த போதும், வரதட்சணை கொடுமை நடக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், இதச பிரிவுகள் 294(பி, 506(2) க்குண்டான கூறுகள் இதச பிரிவு 498–A ன் கூறுகளின் உள்ளடக்கமாக வருகிறது. எனவே, தனியாக மேற்படி பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்ற நிகழ்நிலை புகார்தாரரின் வாதம் ஏற்புடையதாக இல்லை.

9. நிகழ்நிலை புகார்தாரரின் ஆட்சேபனையில் போதுமான காரணங்கள் குறிப்பிடப்பட்வில்லை என்பதாலும், மேற்படி கூடுதல் இறுதி அறிக்கையில் குறைபாடுகள் இல்லை என்பதாலும், வழக்காவணங்களை பரிசீலனை செய்த போது, மேற்படி பிரிவுகளின் கீழான முகாந்திரம் எழவில்லை என்பதால் மேற்படி மனுவை அனுமதிப்பது நீதியின் பால் உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**மேற்கண்டவாறு இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2025.11.26 19:34:07 -0600

நீதித்துறை நடுவர் எண்.1,
கோவில்பட்டி.